# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 30/2019 நாள்.17.04.2026

DW1- திரு.செல்வம், த/பெ. திரு. சதாசிவம்

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1ஆம் பிரதிவாதி எனது தாயார் என்றால் ஆமாம். எனது தாயாருக்கு என்ன வயது என்றால் 89. நடைஉடையாக இல்லை. நான் சென்னையில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி தரப்பு சாட்சியாகதான் நிரூபண வாக்குமூலம் தாக்கல்செய்துள்ளேன் என்றால் ஆமாம். வாதிகள் என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் இடம் எங்களுடையது இல்லை என்று சொல்லியுள்ளார்கள். என் அம்மா கிரையம் வாங்கிய மனை எண் 15 யாருக்கு சொந்தமானது என்று நான் ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த ஆண்டு என் தாயார் கிரையம் வாங்கினார் என்றால் 1989. கிரையம் வாங்கும்போது பார்த்தேனா என்றால் அப்போது நான் அங்கில்லை. இந்த வழக்கு தாக்கலாவதற்கு முன்பாகவே பார்த்துள்ளேன். மனை எண் 15 புல எண் 412/6 யாருக்கு சொந்தமானது என்றால் ஜோதிராமன் என்ற முகவருக்கு சொந்தம். ஜோதிராமனுக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் அதிகார ஆவணம் பார்த்தேன். புல எண் 412/6 யாருக்கு சொந்தமானது என்பதை பொறுத்து கிரைய ஆவணம் பார்க்கவில்லை என்றால் ஆமாம். பட்டா யார் பெயரிலிருந்தது என்றால் பட்டாணியம்மாள், கந்தசாமி. அந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டாணியம்மாள், கந்தசாமி பெயரில் பட்டாவே கிடையாது என்றும் நான் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண் 412/6இல் யார் மனை பிரித்தது என்றால் ஜோதிராமன், பாலு. புல எண் 412/6 ஜோதிராமன், பாலு லேவுட் போட்டதை குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 412/6 இல் உட்பிரிவுகள் எப்போது ஏற்பட்டது என்றால் தெரியாது. என் அம்மா எந்த ஆவணங்களை பார்த்து கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என் அம்மாவை கேட்டால்தான் அந்த விபரம் தெரிய வரும் என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்கள் வாதிக்கு சொந்தமான சொத்துக்கள் என்பதற்கு என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு சொந்தமானதல்ல என்று நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் என் அம்மாவின் பத்திரத்தின் அடிப்படையில் சொன்னேன். நிரூபண வாக்குமூலத்தில் பட்டாணியம்மாளுக்கு சொந்தமான சொத்தை அவர்கள் குடும்பத்தார்

காமாட்சி நகர் என்று மனை பிரித்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். பட்டாணியம்மாள் வாரிசுகள் ஜோதிராஜனுக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த அதிகாரத்தின் அடிப்படையில் என் அம்மா கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.8தான் என் அம்மா கிரையம் வாங்கிய சொத்து என்றால் ஆமாம். கிரைய பத்திரத்தில் அதிகாரம் கொடுத்த நபர்களாக காசியம்மாள், சரஸ்வதி பெயர் கொடுக்கபட்டுள்ளது என்றால் ஆமாம். பட்டாணியம்மாள் வாரிசுகள் அதிகாரம் கொடுத்து அதன் அடிப்படையில் எனது தாயார் கிரையம் வாங்கவில்லை என்று சொன்னால் தெரியவில்லை. தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு சொந்தமான சொத்துக்கள் பட்டாணியம்மாளுக்கு சொந்தமானதல்ல என்று சொன்னால் சரியல்ல. மனை எண் 15 கிரையம் வாங்கும்போது என் அம்மா எங்கு குடியிருந்தார் என்றால் புல்லவராயன்குடிகாடு. தாவா சொத்திற்கும் புல்லவராயன்குடிகாட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 27 கி.மீ. என் அம்மா புல்லவராயன்குடிகாட்டில் குடியிருந்து வசித்து வந்தார் என்றால் ஆமாம். மனை எண் 15இல் என் தாயார் மீது எந்தவிதமான அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் அனுபவம் என்றால் தற்காலிக கொட்டகை போட்டு 3, 4 மாடுகள் வைத்திருந்தார். நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 412/6 என்பது 1986 இல் உட்பிரிவாகியுள்ளது என்றால் எனக்கு படித்து பார்த்து தெரிந்துகொள்ள தெரியாது. தாவா புல எண் 412/6 என்பது 1ஆம் வாதியின் தாத்தாவும், 2ஆம் வாதியின் தகப்பனாருமான நாதப்புடையாருக்கு சொந்தமானது என்றால் இல்லை. நாதப்புடையாரின் வாரிசான இடும்பைய்யாஉடையாருக்கு கிடைக்கபெற்று அவரின் வாரிசுகளான 1ஆம் வாதியின் தாயார் மற்றும் 2ஆம் வாதி பெயருக்கு 1996ஆம் வருடம் பதிவு செய்யபட்ட உயில் மூலம் வாதிகளுக்கு கிடைக்கபெற்றது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கபட்டபோது அவர் தெரியாது என்று சொல்லிவிட்டார். வழக்கு ஆவணங்களை காண்பிக்கபடுபவைகளை நான் படித்து பார்த்தால் தாவா சொத்து வாதிகளுக்கு சொந்தமானது என்று தெரிந்துவிடும் என்பதால் அதைபடித்து பார்த்து தெரிந்துகொள்ள தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.7 மனை வரைபடம் காமாட்சி நகர் வரைபடம் என்றால் ஆமாம். அந்த வரைபடம் 24.8.1986 இல் ஊராட்சி மன்ற தலைவரால் அங்கீகரிக்கபட்டுள்ளது என்றால் ஆமாம். 412/6 என்பது மனைபிரிவு அங்கீகரிக்கபடுவதற்கு முன்பாகவே உட்பிரிவாகிவிட்டது என்றால் தெரியாது. 412/6சி எந்தவிதமான உரிமையும் இல்லாமல் காசியம்மாள் மற்றும் சரஸ்வதியம்மாள் ஜோதிராஜனுக்கு கொடுத்த அதிகாரத்தின் அடிப்படையில் எனது தாயார் மனை எண் 15 ஐ

கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. காசியம்மாள், சரஸ்வதியம்மாளுக்கு 412/6இல் பி, டி மட்டும்தான் சொந்தம் என்றும் 412/6சி சொந்தமானதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை அபகரிக்கவேண்டும் என்பதற்காக 412/6 உட்பிரிவு செய்யபட்டதை மறைத்து லேவுட் போடபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மனை எண் 15கிரையம் வாங்கிய எனது தாயார் என்ன கட்சி செய்கிறார் அதேபோல் மற்ற கிரையம் வாங்கியவர்கள் என்ன கட்சி செய்கிறார் என்று தெரியுமா என்றால் மற்றவர்கள் கட்சி தெரியாது. மனை எண் 15 எந்த காலத்திலும் என்னுடைய தாயார் அனுபவத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. ஜோதிராமனுடன் சேர்ந்து எனது தாயாரும் மனை எண் 15 ஐ பொறுத்து தவறான ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என் தாயார் தாவா வழக்கு தவிர மனை எண் 15 அவருக்கு சொந்தம் என்பதை காண்பிக்க வேறு வழக்கு போட்டுள்ளாரா என்றால் இல்லை. அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யாததற்கு காரணம் மனை எண் 15ஐ பொறுத்து என் தாயாரிடம் எந்த ஆவணங்களும் கிடையாது என்றும் அவருக்கு விற்றவருக்கும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் வந்து சாட்சியம் அளித்தால் உண்மைநிலை தெரிந்துவிடும் என்பதால் அவர் முன்னிலையாகவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்து அவர்களுக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே சொத்து அவர்களுக்கு சொந்தம் என்றும் தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>4, 12 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.17 17:10:26 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**